# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2018ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 06.02.2018 | 1)தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் முதற்கட்டமாக பாதாளச்சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த 2005ம் ஆண்டில் தமிழக அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி திட்டம் நான்கு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு செயல்படுத்த திட்டமிடப்பட்டது. இதில் முதல் மூன்று சிப்ப பணிகள் கழிவு நீர் குழாய்கள் அமைப்பதற்கும், நான்காவது சிப்பம் பணி 24 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மாநகராட்சிக்கு சொந்தமான புல்தோட்டம் பகுதியில் அமைப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டது. புல்தோட்டம் பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான பணியானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.17.99 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வந்தது. இந்நிலையில் 2009ஆம் ஆண்டில் மேற்படி பகுதிவாழ் மக்கள் தெரிவித்த ஆட்சேபனையின் காரணமாக மேற்படி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான மாற்று இடம் தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான தருவைக்குளம் உரக்கிடங்கு பகுதியில் தேர்வு செய்யப்பட்ட நிலையில் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை வெளியேற்றுவதற்கான அனுமதி வழங்கப்படாததால் மேற்படி பணியானது துவக்கப்படவில்லை.<br><br>இந்நிலையில் 24 MLD கொள்ளளவு உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை DBFOT (Design Build Finance Operate and Transfer) முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (டி) எண் 147 நாள் 20.03.2013ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேற்படி உத்திரவினைத் தொடர்ந்து 24 MLD திறன் கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை OEG & WABAG நிறுவனமானது ரூ.10.00 இலட்சத்தினை மறைமுக மான்யமாக மாநகராட்சிக்கு செலுத்தியதன் அடிப்படையில் DBFOT முறையில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் செயற்பொறியாளரால் கையொப்பமிடப்பட்ட 02.08.2013ம் தேதிய ஒப்பந்த பத்திரம் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டது.<br><br>மேற்படி பணிக்கு 02.08.2013ல் ஒப்பந்தப்பத்திரம் இறுதி செய்யப்பட்டநிலையில் மேற்படி நிறுவனம் பணியினை ஆரம்பித்து ஆரம்பக்கட்ட பணி மட்டும் நடைபெற்றது அதன்பின் தொடர் பணியினை மேற்கொள்ள எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்படி நிறுவனத்திற்கு 02.08.2013 முதல் 28.03.2016 வரையிலான காலத்தில் பலமுறை பணியினை மேற்கொள்ள அறிவிப்பு | 34) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

வழங்கியும் பணியில் முன்னேற்றம் எதுவும் இல்லை. இறுதியாக ஒப்பந்த விதிகளின்படி 28.03.2016ல் இறுதி எச்சரிக்கை அறிவிப்பு கடிதம் அனுப்பபட்டது. மேற்படி அறிவிப்பின்படி மேற்படி நிறுவனம் அனுப்பிய பதில் திருப்பதிகரமாக இல்லாததால் இம்மாநகராட்சி கடித எண் இ3/11512/2007 நாள் 27.07.2016ன்படி OEG & WABAG நிறுவனத்தின் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது.

மேலும் மேற்படி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்துவது குறித்து இவ்வலுவலக இ3/11512/2007 எண்ணிட்ட 05.08.2016 தேதிய கடிதம் வாயிலாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டதின் அடிப்படையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்படி திட்டத்தினை ஆய்வு செய்து செயற்பொறியாளர் கழிவுநீர் கோட்டம், தூத்துக்குடி அவர்களின் 51016/F/TCNUGSS/STP/JDO/2016 எண்ணிட்ட 05.10.2016ம் தேதிய கடிதத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ரூ.40.00 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 17817/2013/UGSS எண்ணிட்ட 11.05.2017 தேதிய கடிதத்தில் தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள M/s.வேதாந்தா தாமிர ஆலை 24 MLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் அமைத்து அதனை மேற்படி நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மேற்படி கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து கிடைக்கப்பெறும் நீரினை மேற்படி நிறுவனத்தின் பயன்பாட்டிற்கு எடுத்துச்செல்லும் வகையிலும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்கொள்ள மேற்படி நிறுவனம் தயார் நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சியிலிருந்து தொழிற்சாலை நிறுவனங்களிடம் மாநகராட்சி கழிவுநீரை எடுத்துச்செல்ல ஏதுவாக விருப்ப கேட்பு (Expression of Interest) கோருவதனால் தூத்துக்குடி மாநகராட்சியானது முன்மாதிரியாக செயல்படுவதுடன் மாநகராட்சிக்கு பொருளாதாரரீதியாக பயனுள்ளதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தூத்துக்குடி மாநகராட்சியில் உற்பத்தியாகும் கழிவுநீரினை (Raw Sewage) தொழிற்சாலைகள் தாங்களாகவே சுத்திகரிப்பு செய்து சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினை தொழிற்சாலைகள் பயன்படுத்த ஏதுவாக மாநகராட்சியால் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. எனவே அத்தகையை தொழிற்சாலைகள் தாங்களாகவே முன்வந்து விருப்ப கேட்பு முறையில் மேற்படி பணியினை DBFOT திட்ட முறையில் மேற்கொள்ளவும் அதற்காக தேவைப்படும் அனைத்து துறையின் அனுமதியினை மேற்படி தொழிற்சாலைகளே பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும் 07.07.2017ம் தேதிய விருப்ப கேட்பு அறிவிப்பில் கோரப்பட்டது.

கழிவு மூலப்பொருள் விற்பனைக்கான விருப்ப கேட்பு கடிதம் DBFOT முறையில் 07.07.2017 அன்று கோரப்பட்டது. தற்போது தமிழ்நாட்டின் ஏனைய நகராட்சி, மாநகராட்சிகளில் மற்றும் சென்னை மெட்ரோ வாட்டர் ஆகிய நிறுவனத்தின் கழிவு மூலப்பொருள்கள் (Raw Sewage) விற்பனை செய்வதாக தெரியவில்லை. ஆகையால் கழிவுமூலப்பொருளுக்கான சந்தை மதிப்பு மற்றும்

வருங்கால சந்தை மதிப்பு அறிய இயலவில்லை. மேலும் DBFOT முறையின்படி தொடர்ச்சியாக 30 ஆண்டுகளுக்கு கழிவுநீருக்கான சந்தை மதிப்பு முன்கூட்டியே நிர்ணயம் செய்வதால் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படும். மேற்படி காரணத்தினால் கழிவுநீர் மூலப்பொருளை (Raw Sewage) Secondary Treated Effluent Water மாதிரியாக நேரடியாக தொழிற்சாலை நிறுவனத்திற்கு விற்பனை செய்வதன் மூலம் கழிவு மூலப்பொருள்களுக்கு (Raw Sewage) குறிப்பிட்ட காலத்திற்கு விலை மறுநிர்ணயம் செய்ய இயலும் என்பதால் மாநகராட்சிக்கு இலாபகரமானதாக இருக்கும் என்ற காரணத்தினால் கழிவு நீர் மூலப்பொருளை நேரடி விற்பனை செய்வதற்கு ஏதுவாக மறுவிருப்ப கேட்பு (Revised EOI ) கோருவதற்கு மாமன்றம் தீர்மானம் எண் 86 நாள் 19.09.2017ன் படி அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி தீர்மானத்தின் அடிப்படையில் மறுவிருப்ப கேட்பு 16.10.2017 அன்று கோரப்பட்டதில் M/s.பசிபிக் டெக்னிக்கல் சர்வீசஸ் இந்தியா பிரைவேட் லிட், மற்றும் M/s.வேதாந்தா லிமிடெட், ஆகிய இரண்டு நிறுவனங்களின் விருப்ப கேட்பு வரப்பெற்றது. மேற்படி விருப்ப கேட்பில் தொழில் நுட்ப ரீதியாக தகுதிவாய்ந்த நிறுவனமான M/s.வேதாந்தா நிறுவனத்திற்கு கழிவுநீர் மூலப்பொருளை மில்லியன் லிட்டருக்கு விலை ரூ.1250/– வீதம் நேரடியாக விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் மேலும் சில பொதுவான மற்றும் சிறப்பான ஒப்பந்த நிபந்தனைகளை விரிவாக தெரிவித்து முன்மொழிவு கோரிக்கை (RFP) கோருவதன் மூலம் தற்போது மேற்குறிப்பிடப்பட்டுள்ள விருப்ப கேட்பில் கோரப்பட்டுள்ள தொகையை காட்டிலும் கூடுதலான தொகை கிடைக்க வாய்ப்பு உள்ளது என்பதால் இம்மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 127 நாள் 20.11.2017ன் படி முன்மொழிவு கோரிக்கை (RFP) கோருவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

முன்மொழிவு கோரிக்கைக்கான பொதுவான நிபந்தனைகள் மற்றும் விற்பனை ஒப்பந்த விதிகள் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் தலைமையில் 12/12/2017ல் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. மேற்படி ஆய்வுக்கூட்டத்தில் இம்மாநகராட்சி மூலம் கழிவுநீர் மூலப்பொருளை நேரடியாக விற்பனை செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரையின் படி நிதி , தொழில்நுட்பம் மற்றும் சட்டப்படியான முன்தகுதிகளுக்கு (Pre qualification) உட்பட்டு முன்மொழிவு கோரிக்கை 14.12.2017ல் கோரப்பட்டது.

மேற்படி முன்மொழிவு கோரிக்கை கோரப்பட்டதில் M/s.வேதாந்தா லிமிடெட் நிறுவனம் மட்டுமே முன்மொழிவு சமர்ப்பித்தது. மேற்படி முன்மொழிவு கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு தொழில் நுட்ப ரீதியாக தகுதியாக உள்ளது என தொழில்நுட்ப குழு தனது 25.01.2018ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தொழில்நுட்ப குழுவின் அறிக்கையின் அடிப்படையில், M/s.வேதாந்தா நிறுவனத்தின் விலைநிர்ணயம் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது. M/s.வேதாந்தா நிறுவனம் தூத்துக்குடி மாநகராட்சியின் கழிவுநீர் மூலப்பொருளை ஒரு மில்லியன் லிட்டருக்கு ரூ.1300/–வீதம் மாநகராட்சிக்கு வழங்குவதாகவும், நாள் ஒன்றுக்கு 24

MLD கழிவுநீரை தொடர்ச்சியாக 30 வருடங்களுக்கு எடுத்துக் கொள்வதாகவும் தெரிவித்து கேட்பு அளித்துள்ளனர்.

மேற்படி நிறுவனம் சமர்ப்பித்துள்ள பிரேரணையின் படி மேற்படி நிறுவனத்திற்கு கழிவு நீரை வழங்குவதால் மாநகர கழிவு நீரானது மேற்படி நிறுவனம் மூலம் வெளியேறுவதுடன் சுற்றுப்புறசுழல் மாசுபாடு மற்றும் பொது சுகாதார பிரச்சனைகள் தீருவதற்கு வாய்ப்பாக அமையும். தூத்துக்குடி மாநகரப்பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் இல்லாததால் கழிவுநீர் முழுவதும் மழைநீர் வடிகாலில் செல்கிறது. இதனால் பெரும் சுகாதார கேடு ஏற்படுகிறது. தற்போது ஒரு சில இடஙகளில் பாதாளச்சாக்கடைத்திட்டம் செயல்படும் நிலையில் 5 முதல் 6 MLD கழிவுநீரானது பக்கிள் ஒடைக்கு அனுப்படுகிறது. இதன் மூலம் அவ்வப்போது பொது சுகாதாரப்பிரச்சனைகளும் எழுகின்றது. பாதாளச்சாக்கடை திட்டமானது 2005ம் ஆண்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அடுத்த மூன்று முதல் ஆறுமாதத்திற்குள் மேற்படி பணியானது செயல்படும் வகையில் முன்னேற்றம் கண்டுள்ளதாக தெரிவித்துள்ளது. தற்போது கழிவுநீரை வெளியேற்றுவதற்கும் சுத்திகரிப்பதற்கும் வழிவகை இல்லாததால் பாதாளச்சாக்கடை திட்ட பணிகள் முடிவடைந்தும் திட்டம் செயல்படுத்த இயலாத சுழல் எழுந்துள்ளது. அதனால் மாநகராட்சிக்கு பெருமளவில் நிதியிழப்பு மற்றும் சுகாதாரப்பிரச்சனைகள் ஏற்படும் நிலை உள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமானது 24 MLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை அமைத்திடும் பணிக்கு ரூ.40 கோடி மதிப்பிடப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாநகராட்சியானது ஏற்கனவே பல்வேறு திட்டங்களின் வாயிலாக கடன் பெற்றுள்ள நிலையில் பெருமளவு செலவினத்தை ஏற்க இயலாத நிலை உள்ளது. மேற்படி காரணத்தினால் 24 MLD திறன்கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் DBFOT முறையில் அமைப்பதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (டி) எண் 147 நாள் 20.03.2013ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது . எனவே கழிவு மூலப்பொருளை (Raw Sewage) நேரடியாக தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதன் வாயிலாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து தொடர்ந்து பராமரிப்பு பணி தொடர்பான செலவினங்களில் இருந்து மாநகராட்சி விடுபட ஏதுவாக அமையும்.

மேலே குறிப்பிட்டுள்ள காரணங்களினால் கழிவுநீர் மூலப்பொருளை நேரடியாக விற்பனை செய்வதன் மூலம் மாநகராட்சிக்கு இலாபகரமானதாக இருக்கும். எனினும் இதுபோன்ற கழிவுநீர் மூலப்பொருள் நேரடியாக விற்பனை செய்யும் முறையானது தமிழ்நாட்டில் தற்போதைய நிலையில் எந்தவொரு உள்ளாட்சி அமைப்புகளிலும் நடைமுறை இல்லாத காரணத்தினால் 14.12.2017ம் தேதிய முன்மொழிவு கோரிக்கையினை உரிய நிபந்தனைகளின் பேரிலும் தவிர மாநில அளவில் உயர்மட்டக்குழு வல்லுநர் குழு ஏற்படுத்தி அதன் மூலம் தற்போது M/s,வேதாந்தா நிறுவனத்திற்கு விற்பனை செய்ய திட்டமிடப்பட்ட விலையினை மாநகராட்சிக்கு யாதொரு இழப்புமின்றி நிர்ணயம் செய்யுமாறும், நிர்ணயம் செய்யப்பட்ட தொகைக்கு அவ்வப்போது ஏற்படுத்தப்படும் விதிமுறைகளுக்கு உட்பட்டு விற்பனை செய்யவதற்கும் உரிய அனுமதி பெற சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பலாம்.

| | | |
|---|---|---|
| | மேலும் 17.01.2018 அன்று கோரப்பட்ட முன்மொழிவு கோரிக்கை கடிதத்தில் இருந்து பெறப்பட்ட விலையினை அடிப்படையாக வைத்து உயர்மட்ட வல்லுநர் குழு பரிசீலித்து கழிவு நீர் விற்பனைக்கு தொடக்க விலையை நிர்ணயம் செய்வதற்கும் உரிய அனுமதி கோரி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப நடவடிக்கை எடுக்கலாம். கழிவு நீர் விற்பனையால் கிடைக்கும் முழு வருவாயும் பாதாளச்சாக்கடை திட்டத்தின் பராமரிப்பு பணிகளுக்காக செலவிடப்பட வேண்டும். மேற்படி சுத்திகரிக்கப்பட்ட நீர் (Treated Water) மற்றும் சுத்திகரிப்பு செய்யும் நிலையில் இறுதியாக உருவாகும் கழிவு (Sludge) ஆகியவை தொழிற்சாலையின் முழுப்பொறுப்பாகும். மேலும் மேற்படி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கழிவுநீரினை சுத்தகரிப்பது தொடர்பாக TNPCB, CPHEEO ஆகியவற்றின் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் அரசு சட்டவிதிகளுக்குட்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளை அணுகி அதற்கான அனுமதியினை பெற்றுக்கொள்ள வேண்டியது மேற்படி நிறுவனத்தின் பொறுப்பாகும்.<br><br>எனவே M/s.வேதாந்தா நிறுவனத்திற்கு Sale of Raw Sewage ல் கழிவுநீரினை விற்பனை செய்ய உரிய அனுமதி கோரி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>இ3/011512/07 | |
| | 2)தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை (4டி) எண்.3 நாள் 22.10.2012ன் படி குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிக்கு ரூ. 282.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டப்பணிகள் 6 தொ–குப்புகளாகப் பிரித்து பணிகள் நடைபெற்றன மேற்கண்ட திட்டப்பணிகளில், தொகுப்பு எண்.1 மற்றும் 2க்கான ஒப்பந்தப்பணிகளான தலைமை நீரேற்று நிலைய பயணிகள் அனைத்தும் மெசர்ஸ் L & T கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மூலம் மேற்கொள்ளப்பட்டு பணிகள் அனைத்தும் முடிவுற்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 22.11.2017 அன்று மாநகராட்சி மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. தொகுப்பு எண் 4, 5 மற்றும் 6க்கான பணிகள் மெசர்ஸ் GKC Projects, ஹைதராபாத் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி பணிகள் தற்பொபது முடிவடையும் நிலையில், பணிகளுக்காக செலவிடப்பட்ட மற்றும் செலவிடப்படவுள்ள தொகை ரூ 243.18 கோடி ஆகும். என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி திட்டத்தின் கீழ் மீதமாகும் தொகை ரூ 31.78 கோடி ஆகும். தற்பொழுது மேற்படி திட்டப்பணியில் மூலமதிப்பீட்டில் சேர்க்கப்படாத சில கூடுதல் பணிகள் குடிநீர் விநியோக அவசியத்தினை கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசியமாகிறது.<br><br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் குடிநீர் திட்டப்பணி குறித்த 24.11.2017ஆம் தேதிய ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மாநகர பொது மக்களின் நலன் மற்றும் பாதகாப்பான குடிநிர் விநியோகத்தினைக் கருத்திற்கொண்டும், பின்வரும் பட்டியலில் கண்டுள்ள பணிகளை ரூ14.27 கோடியில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. | 35) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| வ.எண். | பணிகள் பெயர் | மதிப்பீடுத் தொகை |
| 1 | வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம் முதல் தெப்பம் வரையுள்ள பகுதியிலுள்ள பழுதடைந்த 700மி.மீ. PSC குழாய் மற்றும் 400மி.மீ. CI | 7.10 |

| | | |
|---|---|---|
| | குழாய்களை மாற்றியமைக்கும் பணி | |
| 2 | குடிநீர் திட்டப்பணியில் அனைத்து தொகுப்புகளிலும் ஸ்காடா சிஸ்டம் (Scada) அமைக்கும் பணி | 4.15 |
| 3 | குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை சுற்றி சுற்றுச்சுவர் கட்டும் பணி | 1.33 |
| 4 | குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமையப்பெற்றுள்ள பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 0.92 |
| 5 | D1 மெயின் குழாய் அமைந்துள்ள பகுதிகளில் 110மி.மீ. HDPE பகிர்மானக் குழாய் பதிக்கும் பணி | 0.77 |
| | **மொத்தம்** | **14.27** |
| | மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள விபரப்படி ரூ 14.27 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ள பணிகளுக்கு குடிநீர் திட்டப்பணியின் அவசரம் அவசியம் கருதி JICA திட்டத்தில் உள்ள சேமிப்பு தொகையிலிருந்து பணிகள் மேற்கொள்ளவும், மேற்கண்ட பணிகளை நகராட்சி நிர்வாகஆணையர் அவர்களின் அனுமதி பெற்று மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். இ1022751/2008 | |
| | **3)** இம்மாநகராட்சி பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடைபெற்று வரும் பாதாளச்சாக்கடைத்திட்ட பணிகளில் துணை கழிவுநீர் உந்து நிலையம் போல்டன்புரத்திலிருந்து பிரதான கழிவுநீர் உந்த நிலையம் பீச் ரோடு வரை பிரதான கழிவுநீர் உந்து குழாய்கள் (700PSC) பதிப்பதற்கான பணிகளுக்கு சாலை சீரமைப்பு கட்டணமாக :ரு 3449000/–ஐ நெடுஞ்சாலைத்துறைக்கு செலுத்த வேண்டியுள்ளபடியால் மேற்படி பணிக்கான சாலை சீரமைப்பு கட்டணம் ரூ 3449000/– ஐ பாதாள சாக்கடை திட்ட நிதி கணக்கில் இருந்து செலுத்துவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். இ3/11523/07 | **36)**அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 4) தூத்துக்குடி மாநகராட்சி சர்வே வார்டு 2 பிளாக் 3 T.S.No.35/1A1 ல் (புல்தோட்டம்) ஜார்ஜ் ரோடு பகுதியில் அமைந்துள்ள காலி மனையில் அந்தப் பகுதியில் உள்ள பொது மக்கள் பயன்படுத்திய கழிவு நீர் மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட மனை வழியாக செல்கிறது. மேற்படி மனை இடம் (1) திருமதி. சரஸ்வதி க/பெ (மறைந்த) என். சாந்த குணம் வசிப்பிடம் எண். 16/34 நாயுடுபுரம், கொடைக்கானல் டவுண், திண்டுக்கல் மாவட்டம் மற்றும் (2) டீ செல்வநாயகம் த/பெ தர்மக்கனி நாடார், வசிப்பிடம் செம்பன்பினை, கிராமம், கல்குளம் தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது.<br><br>மேற்படி நபர்கள் தூத்துக்குடி நகராட்சி ஆணையர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து தூத்துக்குடி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு O.S.No. 159/2007 தீர்ப்புரையில் வாதி வழக்குரை தபசில் 5ம் இலக்கச் சொத்தில் வரைபடத்தில் L.E.H.C என சுட்டிகாட்டப்பட்டுள்ள இடத்தில் பிரதிவாதியால் அமைத்துள்ள சட்டப்புறம்பான கழிவு நீர் கால்வாயை அகற்ற வேண்டும் என தீர்ப்புரையில் தெரிவிக்கப்பட்டள்ளது. மேற்படி தாவா இடம் சம்பந்தமாக சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் மாநகராட்சியால் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு MP(MD) No.1 of 2014 IN S.A.(MD) No. SR 12755 of 2014 வழக்கின் 04.06.2015ம் தேதிய தீர்ப்புரையில் மேற்படி தாவா இடம் திருமதி. S. சரஸ்வதி மற்றும் திரு.D. செல்வநாயகம் என்பவருக்கு பாத்தியப்பட்டது என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேற்படி வாதி இடத்தில் கழிவு நீர் கால்வாய் செல்கின்றது. மாற்று இடத்தின் வழியாக காலிவாயினை திருப்பி விட கூடுதல் மதிப்பிடு தொகை ரூ 75.00 இலட்சத்திற்கு மேல் வருகிறது. எனவே சர்வே வார்டு 2 பிளாக் 3 T.S.No.35/1A1 ஜார்ஜ் ரோடு (புல்தோட்டம்) மனையில் 1122 X 32 = 39.00 ச,மீ அளவில் அமைந்துள்ள இடத்தினை அரசு வழிகாட்டுதல் மதிப்பு 1 ச.மீட்டருக்கு ரூ 13400 என கணக்கீட்டு ரூ. 522600/– கிரையத் தொகையாக வருகிறது. ஆனால் மேற்படி இடத்தின் உரிமையாளர் திருமதி. S. சரஸ்வதி அவர்கள் திரு.சு. ராம்சிங், த/பெ. ராஜபாண்டி என்பவருக்கு மேற்படி சொத்தினை விற்பதற்கு ஜெனரல் பவர் பத்திரம் வழங்கியுள்ளார். திரு.சு. ராம்சிங் என்பவர் மேற்படி இடத்தினை ரூ. 1500000/– க்கு விற்பதற்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி இடத்தினை அரசு விதிகளுக்கு உட்பட்டு தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் என்ற பெயரில் கிரையம் செய்ய சென்னை நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று வாங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அரசு விதிகளுக்குட்பட்டு தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் பெயரில் கிரையம் செய்ய சென்னை நகராட்சி நிர்வாக அணையர் அவர்களின் அனுமதி பெயலாம். சி5/7484/2013 | 37) அலுவலகக் குறிப்பு அனுமதிக் –கப்பட்டது |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 06.02.2018